IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.

OS.No. 36 /2014

Deposition of witness for DW1

Name : ராஜேந்திரன்

Father Name : சுப்பிரமணி

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the 02 day of November, 2022.

குறுக்கு விசாரணை

1. எனது அம்மாவின் பெயர் காசியம்மாள். என் அப்பா சுப்பிரமணி இறந்துவிட்டார். என்னுடன் பிறந்தவர் செல்வம் என்றால் இல்லை. என்னுடன் பிறந்தவர்கள் தம்பி சுரேஷ், தங்கை ஜோதி மற்றொருவர் பெயர் அசோக் அவர் இறந்துவிட்டார். என் அப்பா சுப்பிரமணியின் அப்பாவின் பெயர் கோவிந்தராஜ். கோவிந்தராஜின் அப்பா பெயர் பாலமந்திரி. என் தாத்தா கோவிந்தராஜின் உடன்பிறந்தவர்கள் 4 பேர். அவர்களுடைய பெயர்கள் எனக்கு தெரியாது. எனக்கு படிக்க தெரியாது என்றால் சரிதான். பிரமாணவாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை யார் தயார் செய்தார்கள் என்றால் நான் சொல்ல சொல்ல தயார் செய்யப்பட்டு படிக்ககேட்டு சரியாக இருந்ததால் நான் கையொப்பமிட்டேன்.

2. என்னுடைய பிரமாணவாக்குமூலத்தில் 2-வது பத்தியில் குறிப்பிட்டுள்ள என் தாத்தாவுடன் பிறந்தவர்கள் பெயர்கள் இல்லை என்று கூற இயலுமா என்றால் தற்பொழுது எனக்கு ஞாபகமில்லை. பாலமந்திரியின் வாரிசுகள் தான் என் தாத்தாவும் அவருடன் பிறந்த மூவரும் என்றால் சரிதான். வழக்கு சொத்து பாலமந்திரிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். பாலமந்திரி இறந்த பிறகு வாரிசு உரிமை என்ற அடிப்படையில் என் தாத்தாவும் மேற்படி மூவரும் சேர்ந்து அனுபவித்து வந்தார்கள் என்றால் சரிதான். மேற்படி நால்வரும் கூட்டாக அனுபவித்து வந்த சொத்து என்றால் சரியல்ல. அவர்களுக்குள் பாகம் பிரித்துக்கொண்டார்கள். வழக்கு சொத்து கூட்டு வாரிசு உரிமை சொத்து என்றால் சரியல்ல.

(வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டு கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது).

K VENKATESAN Digitally signed by K VENKATESAN

DISTRICT MUNSIF

KATPADI.